**டவர் மண்டப திரையரங்கு மன்றம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தயில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடனான தொடர்புடைய இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் தவறுகள் திருத்தங்களாக மீளாய்வாண்டில் ரூபா 271,702,335 தொகை அரசிடமிருந்து கிடைத்த மூலதன மானிய மீதிகளும் ரூபா 4,018,000 ஆன யப்பான் அரசிடமிருந்து கிடைத்த உபகரணங்களின் பெறுமதிக்கு ரூபா 276,798,877 ஆன தொகை திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அச்சீராக்கங்கள் ஊடாக இடம்பெற்ற தாக்கத்தை பின்னோக்கி சீராக்கம் | இக்குறைபாடு எதிர்காலத்தில் சரிசெய்யப்பட்டு குறித்த மாதிரியை பயன்படுத்துவுதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

செய்து முன்னைய ஒப்பீட்டு ரீதியான மீதிகள் மீண்டும் சீராக்கி இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சவ்சிரிபாய கட்டிடத்திற்காக மீளாய்வாண்டிற்காக அடிப்படையொன்று இல்லாமல் பெயரளவில் அறவிடுவதற்கு இணங்கியிருந்த ரூபா 200,000 ஆன குத்தகை வாடகை பெறவேண்டிய வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால் ஆண்டின் வருமானம் மற்றும் பெறவேண்டிய குத்தகை வருமானம் அப்பொறுமானத்தினால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இரு தரப்பினருக்கு இடையே இணக்கப்பா டொன்றிற்கு வராதிருந்தமையால் இது கணக்கீடு செய்யப்படவில்லை. | மன்றத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் பயன்படுத்தும் போது உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளின் பிரகரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| கிடைக்கப் பெற்ற விடயம் | தொகை | கணக்காய்வு சான்றுகளின்மை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| அரசின் மானியங்கள் நிதி நன்கொடைகள் மற்றும் பொருள் நன்கொடைகள் ஒதுக்கத்தின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் இந்த ஒதுக்க மீதிகள் தொடர்பான விபரங்கள் அல்லது இம்மீதிகள் ஒதுக்கங்களாக கணக்கீடு செய்வதற்கு அடிப்படையாக கொண்ட பயன்பாட்டு ஆவணங்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. ஆதலால் இம்மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது. | 78,467,860 | புற்றுச்சீட்டுக்கள், வங்கி வைப்புக்கள், பொருள் பெறுவனவுக் குறிப்பு, கணனி பதிவேடு | இம்மீதிகள் வருடக் கணக்கில் புத்தகங்களில் முன்கொண்டு வரப்படும் மீதிகளாக இருந்ததுடன் இம்மீதிகளை உறுதிப்படுத்துவுதற்கு குறித்த கோவைகள் அல்லது ஏனைய ஆவணங்களை கண்டு பிடிக்க முடியாதிருந்ததாக | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அடிப்படையாக கொண்ட சகல ஆவணங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரை ஏனைய பெறவேண்டிய கணக்கு மீதி ரூபா 4,049,035 ஆக இருந்ததுடன் அதில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட மீதி ரூபா 1,652,321 ஆக இருந்தது. இப்பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு மன்றத்தினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த மீதிகளில் சிறிய அளவொன்று மாத்திரம் தீர்வுசெய்வதற்கு முடியுமாக இருந்ததுடன் அவற்றையும் விரைவில் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முன்றத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1978 இன் 01 ஆம் இலக்க டவர் மண்டப திரையரங்கு மன்ற சட்டத்தின் 8 ஆம் பிரிவு மற்றும் மன்றத்திற்குச் சொந்தமான சவ்சிரிபாய கட்டிடம் மற்றும் அது அமைந்துள்ள இடத்த கையளிப்பதற்குரிய 1980 இன் ஒக்தோபர் 08 ஆந் திகதிய விசேட அளிப்பு அளிப்பு பத்திரத்தின் நியதிகள் | இக்காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடம் தேசிய நூர்தி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தேவையான செயற்பாடு களுக்காக அன்றி வேறு செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தாவிட்டால் அப்போது அது இலங்கை சனநாயக சோஷலிக் குடியரசிற்கு மீள வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் மன்றத்திற்கு சொந்தமான சவ்சிரிபாய கட்டிடம் மற்றும் அது அமைந்துள்ள நிலப்பகுதி நிர்மாண அபிவிருத்தி அதிகாரசபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | இச்செயற்பாட்டை தீர்வு செய்வதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | டவர் மண்டப திரையரங்கு மன்ற சட்டத்தின்ஏற்பாடுக ளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 3,039,041 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 9,769,555 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 12,808,396 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிற்கு தாபன மற்றும் நிர்வாக செலவினம் ரூபா 7,985,671 ஆல் அதிகரித்தமை மற்றும் ஏனைய வருமானம் ரூபா 7,654,660 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணங்களாகும்.

**2.2. விகிதப் பகுப்பாய்வு**

| விகிதம் | 2018 | 2017 |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் | 0.99:1 | 4.81:1 |
| விரைவுச் சொத்து விகிதம் | 0.89:1 | 4.75:1 |

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் கையிலுள்ள காசு மற்றும் வங்கி 54.08 சதவீதத்தினால் குறைவடைந்தமை, வைப்புக்கள், முற்கொடுப்பனவு மற்றும் முற்பணங்கள் 96 சதவீதத்தினால் குறைவடைந்தமை, கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறு செலவினம் 44.04 சதவீதத்தினால் அதிகரித்தமை முன்னைய ஆண்டின் நடைமுறை சொத்து விகித்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்கள விகிதம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது. மேலும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக விரைவுச் சொத்து விகிதமும் குறைவடைந்திருந்தது. அவ்விகிதம் உயர் மட்டத்தில் மிகைத்திருந்ததுடன் மேலும் அவ்விகிதம் குறைவடைந்ததை தவிர்ப்பதற்காக மன்றத்தினால் செயற்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மன்றத்திற்கு 1980 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்டிருந்த சவ்சிரிபாய கட்டிடத்தின் ஒரு பகுதி 1986 ஆம் ஆண்டின் போது நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு 30 வருட குத்தகைக்கு ரூபா 200,000 ஆன வருடாந்த குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 30 வருட குத்தகை 2016 மே 14 ஆந் திகதி முடிவடைந்திருந்ததால் மீண்டும் 30 வருட குத்தகை காலப்பகுதிக்கு இந்த ஆதனம் ரூபா 200,000 ஆன வருடாந்த குத்தகை அடிப்படையில் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது, மேலும் ஆதனத்தை குத்தகைக்கு வழங்கும் போது அரசின் விலை மதிப்பாளரின் மதிப்பீட்டை அடிப்படையாக கொண்டு தற்போதய சிக்கன வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த ஆதனத்தை 2016 மே 15 ஆந் திகதி முதல் மீண்டும் குத்தகைக்கு வழங்குவதற்கான நிர்வாக சபையின் அங்கீகாரம் 2019 மார்ச் 15 ஆந் திகதி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதும் அந்த அங்கீகாரத்தை வழங்கும் போது அரசின் மதிப்பீட்டு அறிக்கையின் | ஏதிர்காலத்தில் இச்சிக்கலை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மன்றத்திற்குச் சொந்தமான ஆதுனங்களை குத்தகைக்கு வழங்கும் போது அரச விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு தற்போதய சிக்கன வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் பேரில் முறையான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

அடிப்படையில் குத்தகை வாடகை திருத்தம் செய்யப்பட வேண்டுமெனவும் மன்றத்திற்கு தேவையான கட்டிட இடவசதிகளை அதிகரித்துக் கொள்ளும் வகையில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் எவ்வித அதிகாரமும் இன்றியும் குத்தகை உடன்படிக்கையொன்றும் இல்லாமலும் இக்கட்டிடம் பெயரளவு குத்தகை வாடகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாத சர்ச்சைக்குரிய நிலைமையொன்றில் காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் அந் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 04 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன | நும்பிக்கை பொறுப்பு சபையின் கூட்டமொன்று நடாத்தப்படாமை காரணமாக அங்கீகாரத்துடன் கூடிய வருடாந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பித்தலில் தாமதித்ததாக | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் அடுத்த ஆண்டின் பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 4,330,000 மதிப்பிடப்பட்ட பெறுமதியான 08 நிகழ்ச்சிகள் முழுமையாக நிறைவேற்றப்படாதிந்ததுடன் ரூபா 13,468,400 மதிப்பிடப்பட்ட பெறுமதியான 04 நிகழ்ச்சித்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றும் சதவீதம் 10 முதல் 30 வரையான வீச்சில் காணப்பட்டன. | அரசியல் ஸ்திரமற்ற நிலைமை அடிப்படையில் நிறுவனம் அவ்வப்போது வெவ்வேறு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டமைபல தடவைகள் பணிப்பாளர் நாயகங்கள் நியமனம் செய்யப்பட்டமை, தீர்மானங்கள் எடுத்தல், கடிதங்கள் ஆவணங்கள் மற்றும் பணத்தை செலவிடும் போது ஏற்பட்ட சிக்கல்களால் அநேகமான நிகழ்ச்சிகளை செயற்படுத்துதல் சிரமமாக இருந்தது. | ஆண்டில் செயற்படுத்தக்கூடிய சாத்தியமான திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அதன் பிரகாரம் செயற்திறனாக செயற்படுத்த வேண்டும். |